**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 360/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | வெங்கடேஷ்வரி, வயது 31 |
| Father Name/Husband Name | : | மாரிக்கண்ணன் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தனியார் கம்பெனியில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of November 2023.

**(எதிரிகள் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் எனது கணவரின் நண்பர்கள். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் செய்து கொடுத்தேன்.
2. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)**

1. கடந்த 21.03.2023 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் நீங்கள் உங்கள் கணவர், உங்கள் அண்ணன் இசக்கிபாண்டி ஆகிய மூவரும் செக்கடி தெரு, பள்ளி வாசல் அருகே இருந்த எதிரிகளிடம் வாங்கிய பணத்தைப்பற்றி கேட்ட போது எதிரிகள் உங்களை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி செங்கல் மற்றும் கற்கல், கம்பு மற்றும் கைகளால் தாக்கி உங்களை காயப்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தார்களா என்றால் இல்லை.
2. பின்னர் காயம்பட்ட நீங்கள் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது மேற்படி சம்பவத்திற்கு நடவடிக்கை

எடுக்க வேண்டி கிழக்கு காவல்நிலைய போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உங்கள் நண்பர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானம் செய்து கொண்டு பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை – இல்லை**

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.